தான் இந்த நிலைமைகளை எல்லாம் ஏற்கெனவே மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். குறிப்பாக மானியத் தொகை எல்லாம் ஒழுங்காக ஏழை எளிய மக்களுக்கு, அரிசன மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே 600 குடும்பங்களுக்கு ஓராண்டில் கொடுக்க வேண்டுமென்று விதிமுறை வைத்திருக்கிறோம். 600 குடும்பங்கள் என்ற அந்த இலக்கினை நாம் கண்டிப்பாக எட்டியாக வேண்டும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த குறிப்பிட்ட இலக்கினை நாம் ஏற்கெனவே எட்டியுள்ளோம். இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தி, முதன்மை ஸ்தானத்தைப் பெற்றிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களை முழுநேர எழுத்தர்களாக நியமிக்கும் திட்டம்.

489 —(*வினா எண். 21479) திரு. செ. செம்மலை, திரு. ஜி. கிருஷ்ணராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சிப் பகுதிநேர எழுத்தர்களை, முழுநேர நிரந்தர எழுத்தர்களாக நியமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகள் கேட்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களது பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களை முழுநேர நிரந்தர எழுத்தர்களாக நியமிப்பது பற்றி அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளைக் கேட்கவில்லை. ஆனால், இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஊராட்சி பகுதிநேர ஊழியர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபாரிசு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அரசின் பரிசீலனையில் இருக்கிற கருத்துருவை விரைவாகச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இது அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. சீக்கிரம் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஜி. கிருஷ்ணராஜ் : தலைவரவர்களே, இதுபோன்று வேலை செய்பவர்களுடைய சங்கத்தின் மூலமாகக் கோரிக்கை ஏதாவது வந்திருக்கிறதா? அதை விரைவிலே பரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, இந்தப் பகுதிநேர ஊழியர்கள் குறைந்த சம்பளம் வாங்குகிறார்கள். அதனால்தான் அவர்கள் பஞ்சாயத்துப் போர்டு பணத்தை சாப்பிடுகின்ற நிலை வந்துவிடுகிறது. இந்தக் குறையைப் போக்க அவர்களுக்கு முழுநேர வேலை கொடுத்து, முழுநேர ஊழியர்களாக்கி, அதிகச் சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தமிழ்நாட்டைப்பொறுத்த வரையில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் போதிய பணவசதி இல்லை. சில ஒன்றியங்களில் பகுதிநேர ஊழியர்களுக்குக் கொடுக்கக் கூட பணம் இல்லாத நிலைமை இருக்கிறது. இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், சீக்கிரமாக ஒரு முடிவினை, நிரந்தரமான ஒரு முடிவினை எடுக்க வேண்டுமென்ற முறையிலே நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பகுதிநேர ஊராட்சி ஒன்றிய எழுத்தர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் ? அவர்கள் அரசுக்கு என்னென்ன கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பல கோரிக்கைகள் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரமான பதிலை அளிக்கிறேன்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, இந்த பகுதிநேர ஊழியர்களை வரன்முறை செய்கிறபோது கல்வித் தகுதி ஏதாவது அடிப்படையாக வைக்கப்பட்டிருக்கிறதா ?

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கல்வித் தகுதி ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் பகுதிநேர எழுத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, இந்தப் பகுதிநேர எழுத்தர்கள் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இவ்வளவு பேர்கள்தான் பகுதி நேர எழுத்தர்களாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ? அதற்கு ஏதாவது வரையறை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதுவும் அந்தக் கோரிக்கைகளில் ஒன்று. ஆகவே அதையும் பரிசீலனை செய்யும்.

ஈரோடு நகராட்சிப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள்.

490—(*வினா எண் 21661) **திரு. கு. ரமணி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சிப் பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் வாடகைக்கு விட கட்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வருடக்கணக்காக அவைகளிலிருந்து வருமானம் இல்லாமலிருக்கக் காரணமென்ன ?

(இ) பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்க அறைகள் கட்ட திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) போதிய வாடகை கொடுக்க யாரும் முன் வராததால் காலியாக உள்ளது.

(இ) ஆம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த ஈரோடு நகராட்சி பேருந்து நிலையம் அண்மையில் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய பேருந்து நிலையம். அதில் அறைகள் கட்டப்பட்டு வாடகைக்கு ஆள் வரவில்லை என்று சொன்னால் அது ஒரு ஆச்சரியமான விஷயம். என்னவென்றே புரியவில்லை. அவற்றை